Civil Services (Main) Examination, 2024

PHKM-B-TML

தமிழ் / TAMIL

தாள் II / Paper II

(இலக்கியம்) / (LITERATURE)

கால அளவு : மூன்று மணி நேரம் Time Allowed : **Three** Hours	மொத்த மதிப்பெண்கள் : **250** Maximum Marks : **250**

வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

வினாக்களுக்கு விடையெழுதும், முன்பாகப் பின்வரும் அறிவுறுத்தல்களை அருள்கூர்ந்து படிக்கவும் :

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் கோடு இடப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாகக் கோடு இடப்பட வேண்டும்.

QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

Please read each of the following instructions carefully before attempting questions :

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

The number of marks carried by a question/part is indicated against it.

*Answers must be written in **TAMIL**.*

Word limit in questions, wherever specified, should be adhered to.

Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.

Optional Province · optionalprovince.com

SECTION A

Q1. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *10×5=50*

(a) மன்னனுக்கு இருக்க வேண்டிய பண்புகள் எவை என்று திருக்குறள் கூறுகிறது ? *10*

(b) திருப்பாவைப் பாடல்கள் பெண்ணியப் பாடல்களா ? *10*

(c) இராவணன் தூதர்களுக்கு விட்ட கட்டளையும் அதன் விளைவுகளும் யாவை ? விளக்குக. *10*

(d) உலகப் பொது அறங்களைப் புறநானூற்றுப் புலவர்கள் எவ்வாறு விளக்கியுள்ளனர் ? *10*

(e) கண்ணகியின் பெண்மை வழக்குரை காதையில் எவ்வாறு வெளிப்படுகிறது ? *10*

Q2. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :

(a) கும்பகர்ணன், இராமன் ஆகிய இருவருக்கும் இடையில் நிகழ்ந்த போரினைக் கம்பர் எவ்வாறு விவரிக்கிறார் ? *20*

(b) குறுந்தொகையில் கூறப்பட்டுள்ள மாந்தர்களின் உணர்வுகளை விளக்கு. *15*

(c) தனது குற்றங்களாக மாணிக்கவாசகர் தெரிவிப்பன எவை ? ஏன். *15*

Q3. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :

(a) மக்கட்பேறு பாண்டியன் அறிவுடை நம்பியின் பாடலில் எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறது ? *20*

(b) பாவை நோன்பின் வழி அறியலாகும் பண்பாட்டுக் கூறுகளை விளக்கு. *15*

(c) திருவாசகத்தில் கூறப்படும் கடவுளின் உருவ வருணனைகள் எவ்வாறானவை ? ஏன் ? *15*

Optional Province · optionalprovince.com

Q4. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :

(a) "போருழந்தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி வாரல்
என்பன போல் மறித்துக் கைகாட்ட" *20*

(b) "கும்பிட்டு வாழ்கிலேன்; யான்
கூற்றையும் ஆடல் கொண்டேன்" *15*

(c) "ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைந்த சரமழை" *15*

Optional Province · optionalprovince.com

SECTION B

Q5. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *10×5=50*

(a) கண்ணன் பாட்டில் பதிவாகியுள்ள பக்திக் கருத்துகளை விளக்கு. *10*

(b) அடித்தள மக்களின் குரல் கறுப்பு மலர்களில் எவ்வாறு புலப்படுகிறது ? *10*

(c) தேர்தல் முறைக்கு மு.வ. இன் பரிந்துரைகள் யாவை ? விவாதி. *10*

(d) சோ சமூக விமர்சனத்தை யாருக்கும் வெட்கமில்லை நாடகத்தின் வழி எவ்வாறு வெளிப்படுத்துகிறார் ? *10*

(e) அகிலனின் கலைத் துறைக் கருத்துகளை விளக்கு. *10*

Q6. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :

(a) ஜெயகாந்தன் சிறுகதைகள் சமகாலத் தமிழ்ச் சமூகத்தை எவ்வாறு பதிவு செய்கின்றன ? *20*

(b) முத்துப்பட்டன் கதைப்பாடல் ஒரு தலித் இலக்கியமா ? விவாதி. *15*

(c) துறவறத்தைக் கண்டித்து இல்லறததைப் பாரதிதாசன் எவ்வாறு போற்றுகிறார் ? *15*

Q7. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :

(a) மக்களின் வறுமை மலையருவியில் எவ்வாறு படம்பிடித்துக் காட்டப்படுகிறது ? விவரி. *20*

(b) திருக்குறளின் தாக்கம் குடும்ப விளக்கில் எவ்வாறு புலப்படுகிறது ? விளக்கு. *15*

(c) தமிழகத்தின் மீது அண்ணா கொண்டிருந்த கருத்துகள் எவை ? ஏன் ? *15*

Optional Province · optionalprovince.com

Q8. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :

(a) ஆநிரை கவர்தல், மீட்டல் என்ற போர்மரபு முத்துப் பட்டன் கதைப்பாடவில் இடம்பெற்றுள்ள முறையை விளக்கு. *20*

(b) முறைப்பெண்ணுக்கும் மாமனுக்கும் இடையில் நடைபெறும் உரையாடல் நாட்டுப்புறப் பாடலாவது எவ்வாறு ? *15*

(c) யாருக்கும் வெட்கமில்லை நாடகம் உணர்த்தும் குடும்பம் குறித்த மதிப்பீடுகள் எவை ? விளக்கு. *15*

Optional Province · optionalprovince.com